முருகப்பெருமான் துணை

**மகான் திரிகோணச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.12.2022, ஞாயிற்றுக்கிழமை

1. சன்மார்க்க நெறிவழி உலகு
சாந்தமும் பாதுகாப்பும் கூடி
இன்பமாய் உலகமக்கள் வாழ
எளிமைபட அருளும் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமையுள சுபகிருது தேள் திங்கள்
இயம்பிட மூவாறு திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18 ம் நாள் 04.12.2022, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசி
வழங்குவேன் திரிகோணச் சித்தரும்
பாரதமே அமைதி பாதுகாப்புற உரைப்பேன்
பண்பான அரங்கன் உபதேசவேதம்
4. வேதமாக மக்களிடை பரவ
வினை வென்று மீள்வர்
ஆதரவு தந்து அரங்கனின்
அன்னதான நெறியை பரப்ப
5. பரப்பவே மக்களுக்கு ஏற்றம்
பரோபகார ஞான சக்தியாக
வரம்பிலா கூடி இனிதே
வாழும் காலமே ஞானிகளின்
6. ஞானிகளின் ஆசி அருள் கூடி
ஞானவானாக மாறும் திடம்
ஞானிகளாகவே ஆற்றல் பெருகி
ஞான உலகம் படைக்கும் வண்ணம்
7. வண்ணமுடன் சக்தி அடைவர்
வையகம் மாற்றும் பலமும்
அண்ணல் அரங்கன் தேடும்
ஆற்றல் மிக்கவர்களாக மாறுவர்
8. மாறவே மண்ணுலகம் தனில்
மக்கள் படை ஞானப்படைகளாக
பாரெங்கும் ஞானத்தலைமை
பக்குவம்பட உருவாக்கும் சக்திகளாக
9. ஆகவே அற்புதம் நிகழ்ந்திட
அரங்கன் அவதார நோக்கமாக
செகமே மாற்றம்தனை காணும்
செப்பிட கலியுக ஞானசபை

10. ஞான சபை அரங்கன் குடிலை
நல்கி கலியுக மக்கள்
தானதரும உயர் வழிகள்பட
தவராஜனின் அனுகூலம் அடைய

11. அடைய உலகமக்களெல்லாம்
ஆகுவர் கலியிலும் ஞானிகளாக
தடையற உலகை மாற்றுவர்
தாமுரைத்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–